செ.வெ.எண்: 36 நாள்: 13.02.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.77900 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (13.02.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி கூறியதாவது.

பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் நோக்கத்தில் மாவட்டந்தோறும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பட்டா மாறுதல் கோரி 9 மனுக்களும், இலவச வீட்டுமனைப்பட்டா கோரி 13 மனுக்களும், புதிய குடும்ப அட்டை கோரி 21 மனுக்களும், காவல்துறை நடவடிக்கைக்காக 12 மனுக்களும், வேலைவாய்ப்பு கோரி 13 மனுக்களும், பசுமைவீடு/சாலைவசதி/குடிநீர்வசதி கோரி 40 மனுக்களும், கல்வி உதவித்தொகை கோரி 17 மனுக்களும், முதியோர் உதவித்தொகை கோரி 20 மனுக்களும், ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பாக 12 மனுக்களும், இதர கோரிக்கைக்காக 142 மனுக்களும் என மொத்தம் 299 மனுக்கள் பெறப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு தலா ரூ.4650 என மொத்தம் ரூ.27900 மதிப்பில் விலையில்லா சலவைப் பெட்டிகளும், புதுக்கோட்டை நகர நிலவரித்திட்டத்தின் சார்பில் 45 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப்பட்டாவிற்கான ஆணைகளும், குளத்தூர் தாலுகா அம்மன் பேட்டை கிராமத்தை சேர்ந்த மகேஷ்வரன் என்பவர் மண்சரிந்து இறந்ததை தொடர்ந்து அவரது தந்தை திரு.ரவி என்பவருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் ரூ.50000 மதிப்பிலான காசோலையும் என பயனாளிகளுக்கு ரூ.77900 மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.செல்வராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**